## புரட்டாசி மாதம் – மாத்தரவிளக்கு

ஒவ்வொரு வருடமும் தமிழ் மாதம் புரட்டாசி முதல் சனிக்கிழமை அல்லது மூன்றாம் ஐந்தாவது சனிக்கிழமைகளில் பெருமாளுக்கு அவரவர் கிரகத்தில்  மாவிளக்கு ஏற்றுவது வழக்கம் .

திருப்பதியில் கொடியேற்றத்துடன் உத்சவம் நடந்தாலும் அல்லது மகாளயம் வந்தாலும் அந்த சனிக்கிழமைகளில் மாவிளக்கு ஏற்றுவது இல்லை.

இரண்டாம் அல்லது நான்காம் சனிக்கிழமைகளில் அவரவர் சௌளகரியத்திற்கு ஏற்ப மாவிளக்கு ஏற்றுவது வழக்கம் .

இந்த மாவிளக்கு இரண்டு வகையான முறையில் ஏற்றுவர்.

**முதல் முறை:**

வரட்டு அரிசியை முன்பு எந்திரத்தில் மாவாக அரைத்து சலித்து வைத்துக்கொள்வர் .அல்லது மிக்ஸியில் அரைத்து சலித்து வைத்துக்கொள்ள வேண்டும் .

இந்த மாவினை முதல் நாள் காலை தலைக்கு குளித்துவிட்டு சாப்பிடாமல் அரைத்து  சுத்தமாக ஒரு டப்பாவில் வைத்துக்கொள்ள வேண்டும் .

திருவிளக்கு ஏற்றுவதற்கு முன் மாவுடன் நாட்டு சக்கரையை சேர்த்து கலந்து கொள்ள வேண்டும் . பின் நெய் ,ஏலக்காய் பொடியும் சேர்த்து கலக்க வேண்படும். அந்த மாவிலிருந்து  சிறிதளவு எடுத்து அதில் உருக்கிய நெய்யைவிட்டு பிசைந்து அகல் விளக்குப்போல் செய்து கொள்ள வேண்டும்.

மிச்ச மாவினை மலைப்போல குவித்து அதன்மீது செய்த விளக்கினை வைத்து அதில் நிறைய நெய்யினை சேர்த்து ஒரு திரியை சேர்த்து மற்றொறு திரியினால் அந்த மாவிளக்கினை ஏற்ற வேண்டும் .

மலையாக உள்ள மாவின் இருபுறமும் இரு வாழைப்பழத்தை உரித்து பக்கத்திற்கு ஒன்றாக வைக்க வேண்டும். அந்த மாவின் மீது சிறிதுசிறிதாக செய்த முந்திரி பாதாம் இவைகளை பரவலாக துவவேண்டும்.

பின்பு வெற்றிலை பாக்கு, உடைத்ததேங்காவினை வைத்து பெருமாளுக்கு நைவேதியம் செய்யவேண்டும் . பின்பு அகத்தில் உள்ள அனைவரும். தனிதனியாக கற்பூற ஆரத்தி காட்டி  திருவேங்கடமுடையான் உண்டியலில் காசு சேர்க்க வேண்டும் . காபி போன்ற பானங்களை பிறகுதான்  சாப்பிடுவர். இதனை விடியற்காலையிலேயே செய்வர் .

அவரவர் அகத்துடைய வழக்கப்படி ஒரு தளிகை அரை தளிகை என்று சமரப்பிப்பது வழக்கம்.

ஒரு தளிகை என்றால் 8 ஆழாக்கும் ஒரு பிடியும் ஆகும். அரை தளிகை என்றால் 4 ஆழாக்கும் ஒரு பிடியும் ஆகும்.

ஒரு தளிகைக்கு 2 கிலோ நாட்டுசக்கரை அரை தளிகைக்கு ஒரு கிலோ நாட்டுசக்கரை தேவைப்படும் .

**இரண்டாம் முறை:**

சிலர் அரிசியை ஊரப்போட்டு அதனை மாவாக அரைத்து அதில் வெல்லத்தை சேர்த்து அரைத்து பின் தாம்பாளத்தில் வைத்து நெய் சேர்த்து விளக்கு ஏற்றுவர்.

இரண்டு முறையிலும் ஒரு முறை நெய் சேர்த்தபின் மறுமுறை சேர்பதில்லை.

**தளிகை :**

அன்று பெருமாளுக்கு அலங்கார தளிகை பண்ணி சமர்பிப்பர்.

பருப்பு ,மோர்குழம்பு ,வாழைக்காய் பொடி சேர்த்த கரமது
பீன்ஸ் பருப்புஉசிலி அல்லது சாதா கரமது புளிப்பு கூட்டு
வடை, சக்கரைப்பொங்கல், எள்ளோறை போன்றவை பண்ணி
சமர்பிப்பர், திருவிளக்கு மலையேறும்போது கோவிந்தா என்று சொல்லி
கற்பூரம். ஏற்றி எல்லோரும் சேவிக்க வேண் டும்.

பெருமாள் இவ்வளவு நேரம் நம் அகத்தில் இருந்து பின் மலை ஏறுகிறார் என்பது ஐதிகம் .

பின் திருவாரதனம் செய்து தளிகை சமர்பித்தவுடன்
பிராமண யாரையாவது அழைத்து அவரை சாப்பிட சொல்லி
பின் அவர் சாப்பிட்டபின் தாம்பூலம் தட்சணைக் கொடுத்து
ஆசீர்வாதம் பெறுவது வழக்கம் . அன்று இரவு பலகாரம் தான்.

ஒவ்வொரு வருடமும் நாம் பெருமாளை நம் அகத்துக்கு அழைத்து அவருக்கு ததியாரதனை பண்ணுவதாக ஐதீகம் .

ஒவ்வொரு குடும்பத்தில் ஒவ்வொரு வழக்கம் இருக்கும் அதனை அவரவர் குடும்ப பெரியவர்களிடம் கேட்டு தெரிந்து கொள்ளவும் .